(1) Complaint
Under Section 173 BNSS

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8167296

1. District : Tiruppur PS: VAC Year: 2026 FIR No.: 2/2026/AC/IPR Date: 03.06.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention Of Corruption Sections பிரிவுகள்: 7(a) & (b)
(ii) Act சட்டம்: Act, 1988 as amended in Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 25.05.2026 Date to : 02.06.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 11.30 Time to : 20.15
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 03.06.2026 Time : 07.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 03.06.2026 Time : 07.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D. Vol.1 நேரம்

4. Type of Information : Written/ Oral : Tamil Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: At about 27 km South West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : O/o. Panchayat Office
முறைக் காவல் எண் முகவரி K. Ayyampalayam
Palladam Union, Tiruppur District

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. Kathirvel (b) Father's/ Husband's Name : P. Kumarasamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 36/2026 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Contractor (g) Address : Door No. 1/4 Vellathottam,
தொழில் முகவரி K. Ayyampalayam, Palladam Taluk.
Tiruppur District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Mr. Kanthasamy, Panchayat Secretary, Palladam Union,
Tiruppur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) –

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு –

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) –

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

3/6/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 03.01.2026
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Sasilekha
Rank: நிலை Inspector of Police No.எண்
VPAC, Tiruppur.
03.01.2026

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற நீதிபதி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 2/2026/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 03.06.2026- ம் தேதி காலை 07.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திரு.K.கதிர்வேல், த/பெ.குமாரசாமி, கதவு எண் 1/7, வெள்ளத்தோட்டம், கே.அய்யம்பாளையம், பல்லடம் தாலுகா, திருப்பூர் மாவட்டம் என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி கொடுத்த தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர். K.கதிர்வேல், த/பெ.குமாரசாமி, கதவு எண் 1/7, வெள்ளத்தோட்டம், கே.அய்யம்பாளையம், பல்லடம் தாலுகா, திருப்பூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, திருப்பூர். நான் திருப்பூர் மாவட்டம், பல்லடம், கே.அய்யம்பாளையம், வெள்ளத்தோட்டத்தில் வசித்து வருகிறேன். நான் எனது அப்பா பெயரில் ராகவ் ஏஜென்சீஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறேன். ராகவ் ஏஜென்சீஸ் பெயரில் பல்லடம் யூனியன் அலுவலகத்தில் ஒப்பந்ததாரராக பதிவு செய்து கடந்த 5 வருடமாக பில்டிங் காண்ட்ராக்ட் வேலைகளை செய்து வருகிறேன். மேலும், மார்ச் 2025 முதல் பொது சுகாதார பணிகள், சாக்கடை சுத்தம் செய்தல், எலக்ட்ரிக்கல் வேலைகளை பல்லடம் யூனியன் கே.அய்யம்பாளையம் பஞ்சாயத்தில் எடுத்து செய்து வருகிறேன். பொது சுகாதார பணிகள், சாக்கடை சுத்தம் செய்தல், எலக்ட்ரிக்கல் வேலைகளுக்கு பஞ்சாயத்தில் கொட்டேசன் கொடுத்து குறைந்த கொட்டேசன் குறிப்பிடும் நிறுவனத்திற்கு பஞ்சாயத்திலிருந்து வேலை உத்தரவு கொடுப்பார்கள். அந்த வேலைகளுக்கு பஞ்சாயத்திலிருந்து வேலை உத்தரவு கிடைத்தவுடன் வேலை முடித்த பின்னர் பில்களை கொடுத்து அதற்கான தொகை ராகவ் ஏஜென்சீஸிற்கு அக்கவுண்டில் வந்து விடும். எலக்ட்ரிக்கல் மற்றும் சாக்கடை சுத்தம் செய்தல் பணிகளுக்கான

பில் தொகை எனது பெயரில் உள்ள அக்கவுண்டிற்கு வந்துவிடும். 2026-ம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதத்தில் வேலை செய்த பணிகளுக்கான பில் தொகை பஞ்சாயத்திலிருந்து விடுவிக்காமல் நிலுவையில் இருந்து வந்தது. இதனால் நான் கே.அய்யம்பாளையம் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று பஞ்சாயத்து செக்கரட்டரி திரு.கந்தசாமி அவர்களை பார்த்து பில் தொகையை வழங்குமாறு பலமுறை நேரிலும், செல்போன் வழியாகவும் கேட்டேன். அவர் உடனே பில் தொகையை போட்டு விடுவதாக ஒவ்வொரு முறையும் சொல்லி வந்தார். இதுசம்பந்தமாக பல்லடம் யூனியன் அலுவலகத்திற்கு சென்று பிடிஓ திரு.சுரேஷ்குமார் அவர்களை சந்தித்து பில் தொகை விடுவிக்காத விபரத்தை தெரிவித்த போது அவர் உங்களது எந்த பில்லும் எனது லாக்இன்க்கு வரவில்லை என்று தெரிவித்தார். அதன்பின்னர் அந்த பில்லில் 2026-ம் ஆண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதத்தில் சாக்கடை சுத்தம் செய்தல் மற்றும் எலக்ட்ரிக்கல் வேலைகளுக்கான தொகை மட்டும் எனது அக்கவுண்டிற்கு வந்தது. இந்நிலையில் 25.05.2026 ம் தேதி காலை 11.30 மணியளவில் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று பஞ்சாயத்து செக்கரட்டரி திரு.கந்தசாமி அவர்களை பார்த்து பில் தொகை சம்பந்தமாக கேட்ட போது ரெடி செய்து தருவதாக சொல்லிவிட்டு அவர் என்னை அழைத்து கொண்டு கரடிவாவியில் உள்ள வேல் பேக்கரிக்கு சென்றார். அங்கு டீ சாப்பிட்டு விட்டு உங்களுக்கு மார்ச், ஏப்ரல் மாதத்திற்கான பில் தொகையை உடனே போட்டு விடுகிறேன். அதற்கு எனக்கு தனியாக ரூ.30000/- கொடுங்கள். ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதத்திற்கான பில்களுக்கு பணம் ரூ.10,000/- என சேர்த்து மொத்தம் ரூ.40,000/- கொடுத்தால் தான் பில்களை ஆன்லைனில் அப்லோடு செய்வேன், இல்லையென்றால் பில்களை கிடப்பில் போட்டுவிடுவேன் என்று சொன்னார். அதற்கு நான் லேபர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டியுள்ளது, கடன் கட்ட வேண்டியுள்ளது என்று சொன்னபோது அவர் அதெல்லாம் தெரியாது நான் கேட்ட அமவுண்ட்டை கொடுத்தால் தான் பில் போட முடியும் என்று கண்டிப்பாக கூறினார். அதன்பின்னர் நான் பில் சம்பந்தமாக அவரிடம் தொடர்ந்து

செல்போனில் பேசி கொண்டு இருந்தேன். மேலும் இதுசம்பந்தமாக 27.05.2026 தேதி மதியம் பல்லடம் யூனியன் அலுவலகத்திற்கு சென்று பிடிஓ திரு.சுரேஷ்குமார் அவர்களை சந்தித்து பில் தொகை விடுவிக்காத விபரத்தை தெரிவித்தேன். அப்போது அவர் பஞ்சாயத்து செக்கரட்டரியை அலுவலகத்திற்கு அழைத்து பில்தொகையை விடுவிக்குமாறு சத்தம் போட்டார். பின்னர் 28.05.2026 தேதி மாலை 5.45 மணியளவில் பஞ்சாயத்து செக்கரட்டரி என்னை அழைத்து பஞ்சாயத்து அலுவலகத்திற்கு வருமாறு கூறினார். சிறிதுநேரத்தில் நான் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்றபோது பஞ்சாயத்து செக்கரட்டரி திரு.கந்தசாமி அவர்கள் ஜிஎஸ்டி பைல் செய்வதற்காக ஜனவரி, பிப்ரவரி மாதத்திற்கான 6 வவுச்சர்களை என்னிடம் கொடுத்து ஜிஎஸ்டி பைல் செய்து விட்டு இந்த பில்களை அலுவலகத்தில் வந்து கொடுங்கள் என்று சொன்னார். நான் அந்த பில்களை வாங்கி பார்த்தபோது 2 பில்கள் இல்லாதது சம்பந்தமாக பிடிஓ திரு.சுரேஷ்குமார் அவர்களை 29.05.2026 தேதி மாலை 4 மணியளவில் பார்த்து சொன்னேன். அவர் மீண்டும் பஞ்சாயத்து செக்கரட்டரியை சத்தம் போட்டார். அன்று இரவு 8.30 மணியளவில் பஞ்சாயத்து செக்கரட்டரி திரு.கந்தசாமி அவரது செல்போன் எண்.6380708288 லிருந்து எனது செல்போன் 9715165778 க்கு தொடர்பு கொண்டு பேசி எங்கிருக்கிறீர்கள் என்று கேட்டார். நான் வீட்டில் இருந்த விபரத்தை கூறினேன். அதற்கு அவர் செந்தன் பேக்கரிக்கு வருமாறு சொன்னார். நான் சிறிது நேரத்தில் பல்லடம்- செட்டிபாளையம் ரோட்டில் உள்ள செந்தன் பேக்கரிக்கு சென்று பஞ்சாயத்து செக்கரட்டரி திரு.கந்தசாமி அவர்களை பார்த்தேன். அப்போது அவர் உங்களுக்கு 15 பில்களுக்கான தொகை ரூ.1,65,330/- வருகிறது. அதற்கு முன்னர் உள்ள பில்களுக்கான தொகை ரூ.2,37,863/- வருகிறது. நான் உங்களிடம் குறைவாக தான் கேட்டுள்ளேன். நான் ஏற்கெனவே கேட்ட தொகை ரூ.40,000/-த்தை சீக்கிரமாக கொடுத்தால் பில்களை அப்லோடு செய்துவிடுவேன் என்று சொன்னார். நான் எனக்கு செலவு நிறைய வந்துவிட்டது. அதனால் கையில் பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் நான் கேட்ட தொகையை கொடுத்தால் தான் வேலை ஆகும்.

சும்மாவெல்லாம் வேலை ஆகாது என்று கூறினார். அதற்கு நான் சரி பார்க்கலாம் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். அதன் பிறகு 01.06.2026 தேதி காலை 10.15 மணியளவில் பில் சம்பந்தமாக பஞ்சாயத்து செக்கரட்டரியிடம் நேரில் கேட்டபோது அவர் ரெடி செய்து தருவதாக சொல்லிவிட்டு என்னை அழைத்து கொண்டு கரடிவாவியில் உள்ள வேல் பேக்கரிக்கு சென்றார். அங்கு டீ சாப்பிட்டு விட்டு பேக்கரிக்கு பின்னால் என்னை அழைத்து சென்று பஞ்சாயத்து செக்கரட்டரி கந்தசாமி என்னிடம் இந்த பில்களை இன்னைக்கு நான் பாஸ் பண்ணி விடுகிறேன் அதற்கு நான் ஏற்கனவே சொன்னபடி பணம் ரூ.40,000/- எனக்கு கொடுத்துடுங்க என்று கேட்டார். நான் ஜேஜே வாடகை, லேபர் கூலி கொடுப்பதற்கே பில் பணம் பத்தாமல் உள்ளது என்றும் நான் கடன் வாங்கி போட்டுத்தான் இந்த வேலைகளுக்கான கூலியையே தர வேண்டி உள்ளது என்பதை கூறி தொகை அதிகமாக உள்ளது என்று தெரிவித்தேன். அதற்கு பஞ்சாயத்து செக்கரட்டரி கந்தசாமி ரூ.10,000/- மட்டும் குறைத்து கொள்கிறேன். அதற்கு மேல் குறைக்க முடியாது. இந்த பில்களை பாஸ் செய்வதற்கு ரூ.30,000/- பணமாக எனக்கு கண்டிப்பாக கொடுத்துடுங்க என்றும் கூறினார் மேலும் இன்றே 2 மணிக்குள் உங்களுக்கு பில் தொகை உங்கள் அக்கவுண்டிற்கு வந்து விடும். அந்த தொகையிலிருந்து பணத்தை எடுத்து தனக்கு கொடுக்குமாறு கூறினார். பில் தொகை அனுப்பியவுடன் மீண்டும் கூப்பிடுவதாக என்னிடம் கூறினார். நான் வேறு வழியில்லாமல் சரி என்று சொன்னேன். மாலை சுமார் 3.40 மணியளவில் பஞ்சாயத்து செக்கரட்டரி திரு.கந்தசாமி அவரது செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போனுக்கு இரண்டு மிஸ்டு கால் வந்துள்ளது. நான் உடனே அவரிடம் தொடர்பு கொண்டு பேசிய போது அமவுண்ட் உங்கள் அக்கவுண்டிற்கு வந்துள்ளது என்று சொன்னார். நான் சத்தியமங்கலத்தில் தோட்டத்தில் இருப்பதால் எனக்கு இதுவரை மெசேஜ் எதுவும் வரவில்லை. நான் பார்த்துவிட்டு சொல்கிறேன் என்று சொன்னேன். எனது பெயரில் ஐடிபிஐ வங்கி அக்கவுண்ட் எண்.1195104000074050-க்கு எலெக்ட்ரிக்கல் பில்லுக்கான தொகை ரூ.22,800/- ம், சாக்கடை சுத்தம் செய்ததற்கான தொகை ரூ.20,583/- ம் வந்தது. மேலும்

பொது சுகாதார பணிகளுக்கான தொகை ரூ.1,21,947/- ராகவ் ஏஜென்சீஸ் பெயரில் உள்ள ஐடிபிஐ அக்கவுண்ட் எண்.1195102000006569-க்கும் வந்தது. பின்னர் மாலை சுமார் 04.20 மணிக்கு அவரது செல்போனிலிருந்து எனது செல்போனுக்கு இரண்டு மிஸ்டு கால் வந்தது. நான் உடனே அவருக்கு போன் செய்து அக்கவுண்டில் அமவுண்ட் வந்த விபரத்தை சொன்னபோது நான் சொன்னபடி உங்களுக்கு பில் தொகை பாஸ் செய்துவிட்டேன். எப்போது நான் கேட்ட தொகையை கொடுப்பீர்கள் என்று கேட்டார். தான் கேட்ட தொகையை கொடுத்தால் தான் பேலன்ஸ் பில்லை அப்லோடு செய்வேன் என்று சொன்னார். நான் தோட்டத்தில் வேலை இருக்கிறது. வேலை முடிந்தபின்னர் வந்து தருகிறேன் என்று சொன்னேன். அதன்பின்னர் இதுசம்பந்தமா தொடர்ந்து நானும் அவரும் இரண்டு மூன்று முறை செல்போனில் பேசினோம். பின்னர் 02.06.2026-ம் தேதி இரவு 8.15 மணியளவில் நான் அவரை எனது செல்போனிலிருந்து அழைத்து பேசியபோது அவர் எங்கிருக்கிறீர்கள் என்று கேட்டார். நான் சத்தியமங்கலத்தில் தோட்டத்தில் இருந்த விபரத்தை கூறினேன். உடனே அவர் தான் கேட்ட பணத்துடன் நாளை காலை பஞ்சாயத்து அலுவலகத்திற்கு வந்து என்னை பாருங்கள் என்று சொன்னார். கே.அய்யம்பாளையம் பஞ்சாயத்தில் எனது நிறுவனம் சார்பில் செய்த வேலைகளுக்கு 15 பில்களுக்கான தொகையை விடுவித்ததற்கும், 2 மாதத்திற்கான 8 பில்களுக்கான தொகையை விடுவிப்பதற்கும் கே.அய்யம்பாளையம் பஞ்சாயத்து செக்கரட்டரி திரு.கந்தசாமி லஞ்சமாக கேட்கும் பணம் ரூ.30,000/-த்தை கொடுக்க விருப்பமில்லை. எனவே அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். Sd/-xxxx K.Kathirvel, 03/06/2026. Sir, Received the complaint on 03.06.2026 at 07.00 hrs and made preliminary verification between 07.00 hrs and 07.30 hrs after getting approval from DVAC, Chennai and registered a case in Tiruppur V&AC Cr.No.2/2026/AC/TPR u/s 7(a) & (b) of the Prevention of Corruption Act, 1988, as amended by the Prevention of Corruption

(Amendment) Act, 2018 on 03.06.2026 between 07.30 hrs to 08.30 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 03/06/2026 Inspr. V&AC, TPR.

Original FIR along with original complaint of Tr.K.Kathirvel, S/o.Kumarasamy, Door.No.1/7, Vellathottam, K.Ayyampalayam, Palladam Taluk, Tiruppur District is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Principal District and Sessions Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 03.06.2026